Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 681/2025 PW-3**

Name : பிரபாகரன்
Father / Husband name : பிரகாஷ்
Village : திண்டிவனம்
Age : 32
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 07.05.2026

A1, A4 present. A2, A3 produced from judicial custoday. Defence counsel present. Witness identified by Tindivanam PS HC 2967 Tr.Manikandan.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

திண்டிவனம் மேம்பாலத்திற்கு கீழ் எனக்கு சொந்தமான இடம் மற்றும் கடை இல்லை என்றால் சரியல்ல, கடை உள்ளது அது எனக்கு சொந்தமான இடம் இல்லை. நான் கடைவைத்துள்ள இடம் அரசு பொறம்போக்கும் இடம், அதனை சுற்றி 10, 15 கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த கடைகளை சுற்றி 1வது எதிரியின் அம்மா கடை வைத்துள்ளார் என்றால் சரிதான் ( **நீதிமன்ற கேள்வி - 1வது எதிரி யார் என்றால் சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 1வது எதிரியை கைநீட்டி காண்பித்தார், அவரின் பெயர் தெரியாது என்று சொன்னார்** ) 1வது எதிரி பேருந்தில் பழம் விற்பனை செய்துவருகிறார் என்றால் சரிதான். 1வது எதிரி சம்பவயிடத்தில் பார்த்தேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் 4 நபர்கள் சண்டைபோட்டுக்கொண்டதாக சொல்லியுள்ளேன், அவர்கள் யார் என்று தெரியாது என்றால் சரிதான். போலிசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த பிறகு இரவு 1 மணிக்கு போலிசார் என்னை விசாரித்தார்கள். முதல் விசாரணையில் நாகு என்ற போலிசாரை அடித்ததாக சொல்லியுள்ளேன், அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி** - முதல் விசாரணையில் 4 நபர்கள் சண்டை போட்டதை நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 4 நபர்களில் நான் அடையாளம்காட்டிய 1வது எதிரியும் ஒருவர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள 3 நபர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.